**செய்தி வெளியீடு எண். 30 /2017** **நாள்: 12.05.2017**

# அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட நீர் நிரப்பு மையங்களில் தொலைபேசி மூலம் பதிவு செய்யும் நடைமுறை தொடர்ந்து செயல்படும் – சென்னைக் குடிநீர் வாரியம் அறிவிப்பு

-----

லாரிகள் மூலம் குடிநீர் பெறவிரும்பும் பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம் இணையவழி முன்பதிவு (Online Booking) மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட முன்பதிவு (Centralised Booking) எனும் இரண்டு புதிய சேவைகளை 08.05.2017 முதல் அறிமுகப்படுத்தி தொடர்ந்து நடைமுறைப் படுத்தி வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியத்தால் இந்த இரண்டு சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் லாரி மூலம் குடிநீர் பெற விரும்புவோர் எண்ணிக்கையும் தேவையும் அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட நீர் நிரப்பு மையங்களில் தெலைபேசி மூலம் பதிவு செய்யும் நடைமுறையும் தொடர்ந்து செயல்படும். பொதுமக்கள் அந்த வசதியையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்